மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சொன்னது ஒரு கருத்து. அதுவே முடிவான கருத்தல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதும் ஒரு நல்ல கருத்து. அதையும் ஆராயலாம்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் பேசும்போது ஓரல் இண்டர்வியூவில்தான் அதிகமான தமிழக மாணவர்கள் தோல்வி அடைவதாக ஒரு அச்சத்தைச் சொன்னார்கள். ஆகவே, நான் அறிந்துகொள்ள விரும்புவது, தமிழகத்திலிருந்து பிற்பட்ட சமுதாயம், பார்வார்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் காஸ்ட் ஆகிய சமுதாயங்களிலிருந்து கழிந்த ஆண்டில் எத்தனை மாணவர்கள் ரிட்டன் டெஸ்ட் முடித்துச் சென்றார்கள், ஓரல் டெஸ்டிலே எத்தனை பேர்கள் வெற்றி பெற்றார்கள் என்பதுதான். அந்தக் கணக்கு அரசிடத்தில் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னது, பயிற்சி மையங்களில் பயிற்சி பெற்றவர்கள் தேர்வு பெறவில்லை, ஒருவர் இருவர்தான் தேர்வு பெற்றிருக்கிறார்கள், அதுவும் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு என்று சொன்னேன். ஆனால் அதுவன்னியில், ஐ.ஏ.எஸ். தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் 1985 ஆம் ஆண்டு 2 பேரும், 1986 ஆம் ஆண்டு 6 பேரும், 1988 ஆம் ஆண்டு 5 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களின் ஓய்வூதியம்.

* 2254 திரு. எஸ். டேனியல்ராஜ்:

திரு. எஸ். டி. உகம்சந்த்:

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களின் பென்ஷன் தொகை உயர்த்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

1—8—1989 முதல் சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களின் ஓய்வூதியத்தினை மாதம் ரூ. 250-லிருந்து ரூ. 350 என்று மாநில அரசு உயர்த்தியுள்ளது.

1989 நவம்பர் 1]

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களுடைய பென்ஷன் தொகையைக் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 250 ரூபாயிலிருந்து 350 ரூபாயாக உயர்த்தியுள்ளதாகக் குறிப்பிட்டார்கள். பாராட்டுகிறேன். இருந்தாலும்கூட ஏறிவரும் விலைவாசிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்தத் தொகை போதுமான தொகை என்று நாம் கருத முடியாது. ஆகவே இந்த ஓய்வூதியத்தை 500 ரூபாயாக உயர்த்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் மத்திய அரசின் பென்ஷன் தொகையை வாங்குகிறவர்கள் மாநில அரசின் பென்ஷன் தொகையாக 100 ரூபாய்தான் வாங்குகிறார்கள். எனவே மத்திய அரசின் பென்ஷன் தொகை வாங்குகிறவர்களுக்கும், மாநில அரசு பென்ஷன் தொகை வாங்குகிறவர்களைப்போல வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போதுள்ள நிதி நிலையில் 250 ரூபாயை 350 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தியதே பெரிய காரியம். ஆனால் ஆரம்ப காலத்திலே 50 ரூபாயாகத்தான் இது தொடங்கப்பட்டது. இன்றைக்கு 350 ரூபாய் என்கின்ற அளவிலே இது உயர்ந்திருக்கிறது. மத்திய அரசு வழங்குகின்ற ஓய்வூதியம், அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு மாநில அரசு ஓய்வூதியத்தைக் குறைத்துத் தருகிறதென்ற ஒரு குறையைச் சொன்னார்கள். அது குறையல்ல. ஏனென்றால் மத்திய அரசின் ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கு மாநில அரசின் ஓய்வூதியம் தேவையே இல்லை. இருந்தாலும் அவர்களைச் சிறப்பிக்க வேண்டுமென்பதற்காக மாநில அரசு அந்தத் தொகையை அவர்களுக்கு அளித்துக்கொண்டிருக்கிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய நாட்டினுடைய விடுதலைக்காகப் பாடுபட்ட பல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இன்னும் வறுமைக்கோட்டுக்குக் கீழே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த பென்ஷன் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த பென்ஷன் பெறுகிறவர்கள் மறைந்துவிட்ட பிறகு, அவர்கள் குடும்பங்களுக்கு அந்த பென்ஷன் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, இப்போது அந்த முறையில்லை. ஆனால் குறிப்பிட்ட ஒரு சில தியாகிகளுடைய குடும்பங்களுக்கு, அவர்களுடைய மறைவிற்குப் பிறகும்கூட, அந்தக் குடும்பப் பாதுகாப்பிற்காக, இந்தத் தொகை வழங்கப்படுகிறது.

(9-25)

திரு. கே. ரமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஓய்வு ஊதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குக் கிடைக்கக் கூடிய பென்ஷன் இன்றையதினம் இருக்கிற விலைவாசி அடிப்படையில் பார்க்கிறபோது போதவில்லை என்ற கருத்து பல இடங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. எங்களிடத்திலும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் கொடுத்துவிட்டார்கள். பென்ஷன் வாங்க முடியாத—உண்மையான விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் தியாகிகளுக்கு—அவர்கள் சிறையில் இருந்ததற்காக சர்டிபிகேட் கொடுப்பதற்கான ரெக்கார்டுகளே இல்லை. அவைகளெல்லாம் 'டெஸ்ட்ராய்' பண்ணப்பட்டுவிட்டன அல்லது கொளுத்தப்பட்டுவிட்டன என்று சொல்லுகிறார்கள். அதற்கு கோ-பிரிசனர்ஸ் சர்டிபிகேட் கொடுத்தால் பென்ஷன் கொடுக்கலாம் என்ற ஒரு முறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் இப்போது அந்த முறையும் செல்லுபடியாகமாட்டேன் என்கிறது. என்னோடு சிறையில் இருந்த ஒருவர்—மலாய் நாட்டிலிருந்து இங்கு நாடு கடத்தப்பட்ட ஒருவர்—இறந்த பிறகு அவருடைய மனைவி பென்ஷன் கேட்டு விண்ணப்பிக்க மனு செய்தும்கூட கோவை சிறையிலிருந்து சர்ட்டிபிகேட் கிடைக்காமல்—மறைந்த எங்கள் தலைவர் திரு. பி. இராமமூர்த்தி அவர்களோடும் அவர் சிறையில் இருந்தார்—அவர் சர்டிபிகேட் கொடுத்தும் அதையும் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். எனவே இதற்கு அரசு ஒரு வழிவகை கண்டு, இவ்வாறு கைதியாக இருந்தபோது உடன் இருந்தவர்கள் கோ-பிரிசன்ஸ் சர்ட்டிபிகேட் கொடுத்தால் அதை ஒப்புக்கொண்டு பென்ஷன் கொடுக்கும்படி நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுபோன்ற ஒரு யோசனையை இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்து, முதலமைச்சராக

1989 நவம்பர் 1]

எம்.ஜி.ஆர். இருந்த காலத்தில், 1—4—1980 அன்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. "சிறைச் சான்றிதழ் இல்லாத நேர்வில், மனுதாரரோடு சிறையில் இருந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய சக கைதிச் சான்றிதழ்களை ஏற்கலாம்" என்பது அந்த ஆணை. ஆனால், அந்த ஆணை துர்வினியோகப்படுத்தப் பட்டு, அதன் காரணமாக ஏராளமான போலிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, அது கண்டு பிடிக்கப்பட்டது. எனவே, அந்த முறையைப் பின்பற்றுவதிலே ஒரு தயக்கம் ஏற்பட்டிருக்கின்றது. இருந்தாலும்கூட, சக கைதிகளாக இருந்தவர்கள்—இப்போது நம்முடைய நண்பர் திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டவர்களைப் போன்றவர்கள்—அத்தகையவர்கள்—சந்தேகத்திற்கு எள்ளளவும் இடம் இல்லாத வகையில் உள்ளவர்கள் விடுதலைப் போராட்டத்திலே கலந்துகொண்டு, இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கிற பெரியவர்கள்—அவர்கள் தருகிற இதுபோன்ற சான்றிதழ்கள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்கும் ஓய்வூதியங்கள் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் என்னென்ன? அவற்றின் மூலம் பயனடைந்தோர் விவரம் என்ன என்பனவற்றை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் தொடக்க வினாவுக்கு விடையளித்ததைப்போல், ரூ. 250-லிருந்து ரூ. 350-ஆக தியாகிகளுடைய ஓய்வூதியம் உயர்த்தப்பட்டுள்ளது. அதுவன்னியில், மத்திய மாநில அரசுகளின் ஓய்வூதியம் பெறுகிறவர்களைப் பொறுத்தவரையில்—அவர்கள் மத்திய அரசிலிருந்து ஓய்வூதியம் பெற்றாலும், மாநில அரசின் மூலமாக ஓய்வூதியம் பெற்றாலும், அந்தத் தியாகிகள் இறந்து விட்டால், அவர்களுடைய இறுதிச் சடங்கிற்காக உடனடியாக ரூ. 1,000 வழங்க இப்போது இந்த அரசு உத்திரவிட்டுள்ளது. மேலும் இறந்த தியாகிகளுக்கு மரியாதை செய்யும் வகையில், வட்ட ஆட்சியர் பதவிக்குக் குறையாத ஒரு அரசு அலுவலர் இறந்தவருக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது. ஓய்வூதியதாரர்களுக்கு வருமானச் சான்றிதழ் வழங்கப்படும்போது, விடுதலைப் போராட்ட வீரர்களின் ஓய்

ஊதியம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படக்கூடாது என்ற அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, அவ்வாறே அண்மையில் ஆணையிடப்பட்டிருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள்தான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஓய்வூதியத்தை 100 ரூபாய் உயர்த்திக் கொடுத்ததற்கு நன்றி. ஆனால் அந்த விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் இருப்பவர்களுக்கு ஓய்வூதியத்தை ரூ. 500 என்ற அளவுக்கு உயர்த்திக் கொடுத்த வேண்டுமென்பதோடு, அவர்கள் இறந்த பிறகு அவர்களுடைய மனைவிகளுக்கு ஓய்வூதியம் கொடுக்கவும் அந்தக் கணவன் மனைவிக்கு ஒரே ஒரு பெண் குழந்தை கல்யாணம் ஆகாமல் இருந்தால் அவர் இருக்கும் வரையாவது ஓய்வூதியம் தரவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உருக்கமான யோசனையைத் திருமதி பொன்னம்மாள் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அதை உடனடியாகப் புறக்கணிக்கிற எண்ணம் கொண்டதல்ல இந்த அரசு. அதை நிச்சயமாக இதய சுத்தியோடு யோசிக்கும். ஆனால் ஒன்று சொன்னார்கள், "விரல் விட்டு எண்ணக் கூடியவர்களுக்குத்தான் இது அளிக்கப்படுகிறது" என்று. 1967 ஆம் ஆண்டுவரை சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குரிய ஓய்வூதியம் 1,254 பேர்களுக்குத்தான் வழங்கப்பட்டது. பிறகு தி.மு.க. ஆட்சியிலும் அதற்குப் பிறகு அண்ணா தி.மு.க. ஆட்சியிலும் அந்தத் தொகை பெருகி இன்றைக்கு 9,750 பேர்களுக்கு வழங்கப்படுகிறது. 9,750-ஐ அம்மையார் அவர்கள் விரல்விட்டு எண்ணுவார்களா என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு)

(9-30)

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்கள் இந்தத் தொகையைப் பெறுவதற்காக மனுச் செய்கிறார்கள். அந்த மனுவைப் பரிசீலனை செய்து முடிவு எடுப்பதற்கே நீண்ட காலம் ஆகிறது. எனவே எப்போது அந்தத் தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்படு

கிறதோ, அப்போதுதான் வழங்கப்படுகிறது. அவர்கள், மனுச் செய்த காலத்திலேயிருந்தே அது கிடைக்க வேண்டுமென்று அரசுக்கு முறையீடு செய்து இருக்கிறார்களே, அந்த முறையிலே அவர்கள் எப்போது விண்ணப்பித்தார்களோ அந்த விண்ணப்ப தேதியிலிருந்தே கிடைப்பதற்குரிய முறையிலே அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அது சில நேரங்களில் தகுதியற்றவர்களுக்கும் கிடைத்துவிடக்கூடும் என்ற காரணத்தினால்தான் அந்த மனுக்கள் ஆராயப்படவேண்டியிருக்கிறது. ஆராயாமலே எல்லோருக்கும் அதை அள்ளிக் கொடுத்துவிட இயலாது என்ற காரணத்தினாலேதான் சிறிது காலமாவது அது குறித்து ஆராய்ந்து அதற்குப் பிறகு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தியாகிகளுக்குப் பென்ஷன் வழங்குவதுபோல, மொழிக்காகவும், மாநிலத்தினுடைய எல்லைக்காகவும் போராடி உயிர் நீத்த அந்த உத்தமத் தியாகிகளுக்கு மத்திய அரசாங்கம் ஏதாவது நிதி வழங்க முன்வருமா? அப்படி ஏதாவது தமிழக அரசு முறையிட்டு மைய அரசு ஏதாவது மறுத்து இருக்கிறதா? அப்படி இல்லையென்றால் மாநில அரசு அந்தக் கொள்கையை மேற்கொண்டு உதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மத்திய அரசு அது போன்ற ஒரு முயற்சியிலே ஈடுபடவில்லை. ஆனால் மாநில அரசு மொழி நலம் காப்பதற்கும், எல்லை காப்பதற்கும் பாடுபட்டவர்களுக்கு 'மொழிக் காவலர், எல்லைக்காகப் பாடுபட்டோர்' என்ற வகையில் நிதி உதவித் திட்டம் என்ற பெயரில் மாதந்தோறும் 350 ரூபாய் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படுவது போல் வழங்க வேண்டுமென்று ஆணையிட்டு 1—10—1989 முதல் ஆயிரம் பேர் கூடுதலாக இப்பயனைப் பெறவிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, ஆயிரம் பேர் பயன்படுகின்ற ஒரு திட்டத்தை மாண்புமிகு முதல்வரவர்கள் அறிவித்தது மிக மகிழ்ச்சிக்குரியது. இன்று நவம்பர்

[1989 நவம்பர் 1

1-ஆம் தேதி, 1956-ஆம் ஆண்டு திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இருந்த பகுதிகள் தாய்த் தமிழகத்தோடு இணைந்த நாள் இன்று. அன்று மொழிப் போருக்காகப் பாடுபட்டு திருவிதாங்கூர் தமிழர் களிலே இன்று நாஞ்சில் நாட்டுத் தமிழர்களாக இருக்கின்றவர் களிலே பலருக்குத் தாமிரப் பட்டயங்கள் வழங்கப்பட்டன. இருப் பினும் கூட அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த ஊதியம் சில ருக்கு இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. ஏற்கெனவே வழங்கப் பட்டவர்களுக்குத் தொடர்ந்து வழங்க வேண்டுமென்றும், இது வரை வழங்கப்படாமல் இருக்கின்றவர்களுக்கு வழங்குவதற்குரிய முயற்சியை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அந்தத் திட்டமும் உடனடியாகப் பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர் களே, மாண்புமிகு நண்பர் குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்ட தைப்போல் இன்று நாஞ்சில் நாட்டிற்காக அந்தப் பகுதியைத் தமிழகத்தோடு சேர்க்க வேண்டும் என்பதற்காகப் போராடிய, வெற்றி பெற்ற நாள். இந்த நாளில் அவருடைய கேள்விக்கு நான் தருகின்ற விளக்கம், முன்பு நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது நண்பர் பொன்னப்ப நாடார் அவர்களும், மற்றவர்களும் விடுத்த அழைப்பினை ஏற்று அந்தத் தியாகிகளுக்காக நடை பெற்ற ஒரு திருநாளில்—திங்கள் சந்தை என்று கருதுகின்றேன், அந்த ஊரில் நடைபெற்ற அந்த விழாவில் அந்தத் தியாகிகளுக்கு எல்லாம் மானியங்கள் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப் பட்டது. அவர்களுடைய தியாகத்தைப் போற்றுவதற்கும் வழி வகைகள் செய்யப்பட்டன. திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். இந்த அரசு அரசியல் காழ்ப்புணர்ச்சி யோடு இந்தப் பிரச்சினைகளை என்றைக்கும் அணுகுவது இல்லை என்பது மிக நன்றாகத் தெரியும். அண்மையில் கூட நாமக்கல் கவிஞருடைய தபால் தலை மைய அரசின் சார்பாக வெளியிடப்பட்ட போது இங்குள்ள பல மாடிக் கட்டிடங்களுக்கு நாமக்கல் கவிஞர் மாளிகை என்கின்ற பெயர் சூட்டப்பட்டு இருக் கிறது. அதைப்போலவே பாரதி சு. நெல்லையப்பர் அவர்களுடைய செல்வி திருமதி பூங்கோதை அம்மாள் அவர்கள் மிகக் கஷ்ட நிலை யிலே இருப்பதாக ஒரு கடிதம் எழுதினார்கள். மாண்புமிகு கம்யூ

னிஸ்டு கட்சியினுடைய மாநிலத் தலைவர் நல்லசிவன் அவர்கள் தான் அதற்குப் பரிந்துரை செய்து இருந்தார்கள். உடனடியாக பாலி சு. நெல்லையப்பர் அவர்களுடைய செல்வி திருமதி பூங்கோதை அம்மாள் அவர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியமாக ரூபாய் 500 வழங்க இந்த அரசு ஆணையிட்டு வழங்கப்படுகிறது. எனவே அறிவிக்கப்பட்டு ஒருவேளை எல்லை காக்கும் போராட்டத்தில், நாஞ்சில் நாட்டைக் காக்கும் போராட்டத்தில் தியாகம் செய்தவர்களுக்கு அந்தத் தொகை தற்போது நிறுத்தப்பட்டு இருக்கிறதா என்ற தகவல் இல்லை. அது உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு, நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால், தொடர்ந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசு அங்கீகாரம் பெறாத நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகள்.

* 2235. திரு. சோ. பால்ராஜ் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அங்கீகாரம் பெறாத அனைத்து நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகளை அங்கீகாரம் செய்யும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

இக்கருத்துரு அரசின் ஆய்வில் இருக்கின்றது.

(9 35)

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு நர்சரி பள்ளியிலே இருக்கின்றவர்கள் ஐந்தாவது வரை படித்துவிட்டால் அங்கீகாரம் பெறாத காரணத்தால் அவர்களை ஆறாவது படிப்புக்குச் செல்கின்றபொழுது அங்கிருக்கின்ற பள்ளிகளில் இன்றைக்குப் பரீட்சை வைத்து அவர்களைச் சேர்க்கின்றார்கள். ஐந்தாவது வரை படித்துவிட்டு. பாஸ் செய்துவிட்டு, மறுபடியும் ஆறாவது போகும்பொழுது. அங்கீகாரம் இல்லாத காரணத்தால் அவர்களுக்குப் பள்ளியில் பரீட்சை வைக்கின்றபொழுது சிலபேர்கள் பெயில் ஆகிவிடுகிறார்கள். ஆகவே, அந்தப் பள்ளியில் படிக்கின்றவர்களை ஆறாவது படிக்கச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.